இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப் பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்து விட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும்பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள். (கொலோ 3: 1-4)

# கிறிஸ்துவின் உடலாகிய திருஅவை, ஒப்புரவின் அடையாளம்!

## கனடாவில் திருத்தந்தை அறிவுறுத்தல்

வத்திக்கான்: தனது 37வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணமாக, கனடா நாட்டிற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த ஜூலை 24 தொடங்கி 29 வரை திருப்பயணம் மேற்கொண்டிருந்தார். அப்பயணத்தின் ஒரு நிகழ்வாக அங்குள்ள எட்மன் நகரில் புனித திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் பூர்விக இன மக்களுக்கும் அப்பங்கிலுள்ள உறுப்பினர்களுக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய உரை பின்வருமாறு:

அன்புள்ள சகோதரர் சகோதரிகளே, இந்நேரத்தில் ஒப்புரவு குறித்த என் எண்ணங்களை உங்களோடுப் பகிர்ந்துகொள்ள விழைகிறேன். ஒப்புரவு குறித்து இயேசு என்ன சொல்கிறார் என்றும், ஒப்புரவு என்ற வார்த்தை என்ன அர்த்தத்தைத் தன்னுள் கொண்டுள்ளது என்பது குறித்தும் ஆழ்ந்து சிந்திப்போம்.



திருத்தந்தையுடன் கனடா பூர்விக இனமக்கள் (AFP or licensors)

கிறிஸ்து கொண்டு வந்த ஒப்புரவு என்பது, வெளிப்புற அமைதியைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தம் அல்ல. மாறாக, அனைவருக்கும் மகிழ்வை அளிக்கக் கூடிய ஒருவகையான மனிதர்களின் ஒப்பந்தம் இது. அதாவது, தொடக்க கால கிறிஸ்தவர்கள் அழைத்ததுபோல, 'வாழ்க்கை மரத்தில்' அதாவது, சிலுவையில் இயேசு நம்மை ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாக்குகின்றார் என்பதை உணர்வதாகும்.

### சிலுவை என்னும் மரம்

ஒரு மரம், மண்ணில் வேர் பரப்பி, அதன் இலைகள் வழியாக பிராணவாயுவைக் கொடுத்து, அதன் பழங்களால் நம்மை வளர்க்கிறது. அவ்வாறே, திருஅவையின் அடையாளச் சின்னமாக அமைந்துள்ள சிலுவை என்னும் இம்மரமானது விண்ணையும் மண்ணையும், அதாவது, விண்ணகக் கடவுளையும் மண்ணக மாந்தரையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைந்துள்ளது. இந்தச் சிலுவையில், கிறிஸ்து அனைத்தையும் ஒப்புரவாக்கி, நினைத்துப் பார்க்க முடியாத மற்றும் மன்னிக்க முடியாததாகத் தோன்றிய அனைத்தையும், மற்றும் அனைவரையும் மீண்டும் அரவணைத்து ஒன்றிணைக்கின்றார்.

அன்பானச் சகோதரர் சகோதரிகளே, ஆற்ற முடியாத காயங்களைத் தங்களின் இதயங்களில் சுமந்து கொண்டிருப்பவர்களுக்கு இந்த ஒப்புரவு என்ற வார்த்தை என்ன மாதிரியான அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது என்பது குறித்தும் சிந்திப்போம்.

கடந்த காலத்தில் நாம் சகித்துக் கொண்ட தவறுகளோடும், காயப்பட்ட நினைவுகளோடும், எந்த மனித ஆறுதலாலும் குணப்படுத்த முடியாத அதிர்ச்சிகரமான அனுபவங்களோடும் ஒப்புரவாகிட வேண்டுமானால், முதலில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நோக்கி நம் கண்களைத் திருப்ப வேண்டும். அவரது சிலுவை பீடத்தில் நாம் அமைதி அடைய வேண்டும். ஏனென்றால், சிலுவை மரத்தில்தான் துயரம் அன்பாகவும், இறப்பு வாழ்க்கையாகவும், ஏமாற்றம் நம்பிக்கையாகவும், கைவிடப்படல் நட்புறவாகவும், இடைவெளி ஒன்றிப்பாகவும் மாறுகிறது.

### ஒப்புரவின் அடையாளமான திருஅவை

இரண்டாவதாக, திருஅவை என்பது ஒப்புரவின் உயிருள்ள உடலாக அமைந்துள்ளது என்பதையும் உங்களுக்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். நாம் சந்திக்கும், சிலுவையில் அறையப்பட்ட ஒவ்வொருவரும், சகோதரர் சகோதரிகளாக அன்பு செய்யப்படவேண்டும் என்பதை உணர்வோம். இயேசுவின் தூய உடல் அன்பு செய்யப்படவேண்டும். கிறிஸ்துவின் உடலாகிய திருஅவை, ஒப்புரவின் அடையாளமாக அமையட்டும்.

### உடனிருப்பின் கடவுள்

இயேசுவின் திருஇருதய ஆலயத்தில் தனது ஆசீரை வழங்கும் திருத்தந்தை மூன்றாவதாக, ஒப்புரவு என்ற வார்த்தை நடைமுறையில் திருஅவையுடன் ஒன்றிணைந்து செல்கிறது. திருஅவை என்பது நாம் புதிதாக ஒப்புரவு செய்துகொள்ளும் ஓர் இல்லமாகவும், அங்கு நாம் மீண்டும் புதியதொரு வாழ்வைத் தொடங்கவும் அதில் ஒன்றிணைந்து வளரவும் நமக்கு வழிகாட்டுகிறது. தனிமனிதராகச் சிந்திப்பதை நிறுத்தி விட்டு, நாம் ஒருவருக்கொருவர் சகோதரர் சகோதரிகள் என்பதை ஏற்றுக்கொள்ளும் இல்லமாக திருஅவை அமைந்துள்ளது. திருஅவை என்பது கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் ஓர் இல்லம். இங்குதான் நாம் அனைவரும், தூய ஆவியானவர் வாழும் இல்லங்களாக ஒருவரையொருவர் சந்தித்து, ஒரு-வருக்கொருவர் பணியாற்றி ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகின்றோம்.

> “மன்னிப்பும் ஒப்புரவும், எப்போதும் நலமான, மகிழ்வான ஒரு வாழ்வை முன்னெடுத்துச் செல்ல உதவுகின்றன”

ஒன்றாக இறைவேண்டல் செய்வது, ஒருவருக்கொருவர் உதவுவது, வாழ்க்கை அனுபவங்கள், பொதுவான மகிழ்ச்சிகள் மற்றும் இன்பதுன்பங்களைப் பகிர்ந்துகொள்வது ஆகிய இவைகளே கடவுளின் ஒப்புரவுப் பணிக்கான கதவைத் திறக்கிறது. நமது கடவுள் உடனிருப்பின் கடவுள், அவர் இயேசுவின் வழியாக ஒப்புரவு, இரக்கம் மற்றும் கனிவான அன்பின் மொழியை நமக்குக் கற்பிக்கின்றார்.

-திரேசா -வத்திக்கான் செய்திகள்

# மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களின் கூட்டு ஒருங்கியக்க பயணத்திற்கான ஆய்வு அறிக்கை (பகுதி 2)

## (மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம் )

**பினாங்கு:** பினாங்கில் உள்ள அமல உற்பவி அன்னை பங்கில், 2022, ஜூலை 11 அன்று மலேசிய தேசிய ஆயர் பேரவை நடைபெற்றது. மலேசியாவின் ஒன்பது மாமறை/மறைமாவட்டங்களின் பிரதிநிதிகள் நேரிலும் இயங்கலை வாயிலாகவும் இந்த ஒரு நாள் பேரவை மாநாட்டில் கலந்து கொண்டனர். சிங்கப்பூர் மற்றும் புருணையிலிருந்தும், பிற சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெற்று முடிந்த ஒன்பது மாமறை/மறைமாவட்டங்களின் ஆயர்கள் கூட்டு ஒருங்கியக்க பேரவையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையை / பரிந்துரைகளைப் பிரதிபலிக்கும் சுருக்க அறிக்கைகளை இறைதூதன் மறைமாவட்ட ரீதியாக முன்வைக்கிறது.

இதன் அடிப்படையில் கடந்த வாரம் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த வாரம் மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டதின் ஆய்வு அறிக்கையை உங்கள் முன் வைக்கிறோம்.

ஆவி எத்திசையிலிருந்து வேண்டுமானாலும் "வீசலாம்." அது புத்துணர்ச்சியைக் கொண்டுவருவதோடு, பழையதை முற்றிலுமாக அகற்றிவிடாமல் உயிர் கொடுக்கிறது. இதன்வழி தூய ஆவி புதுப்பிக்கிறது. இந்த கூட்டு ஒருங்கியக்கப் பயணத்தில் (சினோடல்) தூய ஆவியானவர் மறுக்க இயலா நிலையில் நம் விசுவாசப் பயணத்தில் விசுவாசிகள் மூலம் திருஅவையின் ஆற்றல்,




அருள்பணியாளர் மோசஸ் இராயப்பன்

பலவீனங்கள், கனவுகள், வெற்றிகள், தோல்விகள் மற்றும் ஏமாற்றங்களை வெளிப்படுத்துகிறார்.

### தூய ஆவியாரின் வெளிப்படுத்துதலில் பின்வருவனவும் அடங்கும்:

- வார்த்தையில் நம்மை ஆழப்படுத்துதல் மற்றும் இறைவனின் உடனிருப்பின் அனுபவம், அருளடையாளங்களின் கொண்டாட்டங்கள் நம்மை நம்பகமான சீடர்களாக ஆக்குகின்றன.

தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்

# மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களின் கூட்டு ஒருங்கியக்க பயணத்திற்கான ஆய்வு அறிக்கை (பகுதி 2)

(மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம் )

முதல் பக்கத் தொடர்ச்சி..

- மனித சிந்தனை மற்றும் செயல் பாடுகளில் இருந்து மறைந் திருந்தாலும், கடவுளின் அரசு இன்னும் கட்டப்பட்டு வளர்ச்சி யடைவதோடு, கனிகளைத் தந்து கொண்டிருக்கிறது.
- நம் நம்பிக்கையின் மூலம் இயேசுவை உயிருடன் வைத்திருக்க நம்மில் ஒருவருக்கொருவர் உடனான ஒன்றிப்பு இன்றியமையாதது,
- நம்பிக்கை நம் வாழ்விலும், வார்த் தைகளிலும், சாட்சியிலும் வெளிப்பட வேண்டும்.

**நாம் சந்திக்கும் சவால்கள்**

- மனநிறைவு கொள்ளும் மற்றும் திருப்தியடையும் மனநிலை நிலவுகிறது.
- அனைவரையும் உள்ளடக்கிய பங்கேற்பை ஊக்குவிக்க சமத்துவமும் நீதியும் பயன்படுத்தப்பட வேண்டும்.
- வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் மனநிலை மற்றும் பண்பாடு மெதுவாக மாற்றப்பட வேண்டும்.
- திருஅவையின் நிலைப்பாட்டிற்கு மாறான அல்லது முரண்பாடான விருப்பங்களைக் கொண்டவர்கள் திருஅவையை எதிர்ப்பவர்களாகக் கருதக்கூடாது.
- மனிதநேயமானது கொடுப்பதிலும் பெறுவதிலும் அடிப்படையாக இருக்க வேண்டும்.

பங்குகளுக்கு இடையிலான போட்டி மனப்பான்மை ஒற்றுமையை அழிக்கக் கூடும். நீண்ட, தரமற்ற மறையுரைகள் முடிந்த வரை தவிர்க்கப்பட வேண்டும். இல்லச் சந்திப்புகளிலும் மேய்ப்புப் பராமரிப்புகளிலும் கவனம் செலுத்தாத குறைபாடுகள் கவனிக்கப்பட வேண்டும்.

- இனம் மற்றும் மொழி குழுக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது.
- பங்குகளில் ஆன்மீகமற்ற செயல் பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது.
- அவசர தேவைகளின்போது ஏற் படும் தடுமாற்றம்.

**புதிய கவனம் தேவை**

- கடவுள் மற்றும் திருஅவையின் மீது உண்மையான அன்பு எப்போதும் குறிக்கோளாக இருக்க வேண்டும்.
- விசுவாசத்தை பரப்புவதில் திருஅவை பெருமையாகவும் அச்சமின்றியும் செயல்பட வேண்டும்.
- எதிர்காலத்தில் கிறிஸ்துவைப் போன்று முடிவுகளை எடுக்க இளைஞர்கள் அவர்களைத் தயார்படுத்துவதற்கும், எதிர்காலத்தில் உள்ள சவால்களைச் சந்திக்க அவர்களுக்கு உதவுவதற்கும் உருவாக்கப் பயிற்சிகள் அதிகரிக் கப்பட வேண்டும். சமயங்களுக் கிடையிலான கலப்பு திருமணங்கள் அதிகரித்து வருவதால், கத்தோலிக்க இளையோரிடையே நம்பிக்கை பலப்படுத்தப்பட வேண்டும்.
- நேரம் மற்றும் குறுகிய கால மனப் பான்மை நீண்ட கால அர்ப்பணிப்பைத் தடுக்கிறது.
- மந்தமான அ.தி.ச.உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பங்கேற்பிற்கு புதிய திசை மற்றும் வழிகாட்டல் தேவை.
- குறைந்து வரும் திருஅவையின் எண்ணிக்கையை தற்காக்க வெளிப்புற பங்குகளில் தீவிர ஆய்வு தேவை.
- இந்த சினோடல் பயிற்சியில் இளைஞர் களின் பங்கேற்பு மிகக் குறைவு. எதிர்காலத்தை திட்டமிட அதிக இளைஞர்களை ஈடுபடுத்துவது உதவியாக இருக்கும்.

கலாச்சார மரத் தோற்றமானது மறைமாவட்டத்தில் உள்ள பங்குகள் பல ஆண்டுகளாக அனுபவித்து வரும் வளர்ச்சியைக் குறிக்கிறது, இது ஆன்மீகம், தொண்டு, பணிகளுக்கான அர்ப்பணிப்பு மற்றும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் நன்மை ஆகியவற்றின் வளர்ச்சி தெளிவாகத் தெரிகிறது. நற்செய்தி மத்தேயு 25-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளப்படி வலது புறத்தில் இருப்பவர்களையும் இது காட்டுகிறது.

இடது பக்கம் கடவுளையும் மனிதனையும் விட்டு வெகுதூரம் அலைந்தவர்களின் உருவத்தைப் பிரதிபலிக்கிறது. அவை கிளைகளுடன் ஒன்றாக இல்லை. காய்ந்து கருகியதால், இலைகள் கிளைகளிலிருந்து பிரிந்து கீழே விழுகின்றன. கிளைகள் இன்னும் புதியவை, எனவே மனந்திரும்புதல், மனமாற்றம் மற்றும் மனிதகுலத்திற்கான ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம் என்ற உண்மையை உணர்ந்து கொள்வதன் மூலம் சாத்தியமான எதிர்கால வாழ்க்கைக்கான நம்பிக்கையை அளிக்கிறது. மரத்தை மூடியிருக்கும் ஒளி வண்ண வட்டம் இந்த முழு உலகத்தையும் குறிக்கிறது.

மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம் கடவுளின் மாபெரும் திட்டத்தில் ஒரு சிறிய பகுதியாகும். ஆனால் அது கடவுளுடைய அரசைக் கட்டியெழுப் புவதில் அதன் உடனிருப்பும் பங்களிப்பும் மறுக்க முடியாத ஒரு முக்கிய பகுதியாகும். சிலுவையுடன் கூடிய பட்டாம்பூச்சி என்பது மலாக்கா-ஜோகூர் மறைமாவட்ட 50வது ஜூபிலி கொண்டாட்டங்களுக்கான சின்ன




மாகும். வண்ணத்துப்பூச்சியானது வளர்ச்சி மற்றும் வாடிய இலைகளைக் கொண்ட பக்கத்திலிருந்து பறக்கிறது. இது நடந்து முடிந்த பயணத்தின் அடையாளமாகவும் இப்போது மறை மாவட்டத்தின் எதிர்காலத்திற்கான எங்க ளின் வருகையின் தொடக்கத்தையும் இது வெளிப்படுத்துகிறது.

இத்தொடரின் தொடர்ச்சியாக அடுத்த வாரம் பினாங்கு மறைமாவட்டத்தின் ஆய்வு அறிக்கை வெளிவரும்.

## பெட்டாலிங் ஜெயா விண்ணேற்பு அன்னை பங்கில் அ.தி.ச. உருவாக்கப்பயிற்சி

பெட்டாலிங் ஜெயா: இங்குள்ள விண்ணேற்பு அன்னை பங்கில், ‘அ.தி.ச.வில் எனது பங்கு’



எனும் தலைப்பில் சிறப்பு உருவாக்கப்பயிற்சி ஒன்று நடைபெற்றது. பங்கின் தமிழ் திருத்தூதுப்பணிக்குழு ஏற்பாடு செய்த இப்பயிற்சியானது காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை சகோ. அந்தோணி மைக்கல் அவர்களால் வழிநடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உருவாக்கப் பயிற்சியின்போது, அ.தி.ச. தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம், அதன் முக்கியத்துவம், அமைப்புமுறை மற்றும் அதன் வளர்ச்சி படிகள் போன்றவை விவரிக்கப்பட்டன.

*-ஏஞ்சலின் அந்தோணிசாமி.*

## கிள்ளான், புனித லூர்து அன்னை பங்கு மத்திய அரசாங்க மானியம் பெற்றது!

கிள்ளான்: இங்குள்ள புனித லூர்து அன்னை பங்கின் பங்குத்தந்தை கிரிகோரி சான் அவர்கள், நாடாளு மன்ற உறுப்பினர் மாண்புமிகு சார்ல்ஸ் சந்தியாகு அவர்களிடமிருந்து மத்திய அரசின் வழிபாட்டு தலங்களுக் கான மானியத்தின் ஒரு பகுதியாக RM45,000-யை ஆலயக் கட்டடத்தின் புதிப் பித்தலுக்காக 14 ஜூலை அன்று பெற்றுக்கொண் டார்.



இது ஒரு சிறியத் தொகை யாக இருந்தாலும் புதுப்பித் தலுக்குத் தேவைப்படும் பெரிய தொகைக்கு இது தொடக்கமாக உள்ளது எனக் கூறப்பட்டது.

மாண்புமிகு அவர்கள், புனித லூர்து அன்னை பங்கைத் தவிர்த்து, ஒரு சீக்கிய வழிபாட்டு மையத்திற்கும் மற்றுமோர் இந்து ஆலயத்திற்கும் நிதி வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடவுள் முன் செல்வம் படைத்தவர்களாக வாழ்வதே வாழ்வு!

ஆண்டின் பொதுக்காலத்தின் 18ம் ஞாயிறுவில் இணைந்துள்ள நமக்கு, இன்றைய முதல் வாசகத்தில் சபை உரிமையாளர் வாழ்வை வீணிலும் வீண் என எதிர்மறையாகக் குறிப்பிடுகிறார். “ஹெவல்” எனப்படும் எபிரேயச் சொல்லுக்கு ‘வீணானது’ ‘உதவாதது’, ‘பயனற்றது’ என பொருள் கொள்ளலாம். சபை உரையாளரின் பார்வையில் வாழ்வு நிலையற்றது. அதில் ஓடி ஓடி சேகரிக்கும் செல்வம் மனநிறைவு தராதது என கூறுகின்றார். குறுகிய நிலையற்ற வாழ்வில் நமக்குத் தான் எவ்வளவு பேராசை, எவ்வளவு சுயநலம். மகா அலெக்சாண்டர் சாகுமுன் வெறுங்கையாய் உலகில் பிறந்து வெறுமையாய் உலகை விட்டுப் போகிறேன் என்பதை உணர்த்த “இரு கைகளையும் சவப்பெட்டிக்கு வெளியே வைத்து என்னை அடக்கம் செய்யுங்கள்” என்றாராம்.

ஆசையே அழிவுக்குக் காரணம்’ என்ற மகா அலெக்சாண்டரின் வார்த்தைகள் நமக்கு நல்ல பாடம். மண்ணாசையும் பொன்னாசையும் பெண்ணாசையும் கடவுள் மேல் நமக்கிருக்கும் நம்பிக்கையைச் சிதைக்கின்றது என்பது உண்மை. ஒருமுறை கடவுள் உலகைச் சுற்றிப் பார்க்க வந்த போது, பணக்காரன் ஒருவன் கடவுளை அழைத்து “உம் கண்ணுக்கு எட்டிய தூரம் உள்ள நிலபுலன்கள் என்னுடையது” என்று பெருமையாகச் சொன்னான். அதற்கு கடவுள் “உன் ஆன்மா என்னுடையது” என்றாராம்.

இன்றைய நற்செய்தி பொருளாசையை அகற்றி வாழ அழைப்புவிடுக்கின்றது. நற்செய்தியில் நாம் காணும் செல்வந்தனின் கண்களை செல்வம் மறைக்கின்றது. அவர் பேசும் வசனங்களில் “நான்” “எனது” “என்னுடையது” போன்ற ஏக வசனங்களே அதிகம் இடம் பெற்றுள்ளன. தன்னை மீறி, தன் செல்வத்தை மீறி அவனால் யோசிக்க முடியவில்லை. சேர்த்து வைத்து தலைமுறை தலைமுறையாய் உண்டு களிக்க ஆசிக்கின்றான். உலகின் செல்வம் சேர்த்து, கடவுள் முன் செல்வம் இல்லாமல் இருக்கும் இவனைக் கடவுள் “முட்டாளே” என அழைக்கின்றார்.

எல்லாவற்றையும் தாண்டி இறைத்திருவுளம் என்று ஒன்று இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்கள் என்றால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள் என பவுல் வலியுறுத்துகின்றார். உலகின் இன்பமே கதி என்றும், வாழ்வு என்பது அனுபவிப்பதற்கே என்றும் அலைந்து திரிந்தால் நாம் புதியப் படைப்புகள் அல்ல, ஊனியல்பின் மக்கள். உலகம் சார்ந்தவைகளுக்காக மரிக்கவும், பெறும் செல்வத்தைத் தக்க முறையில் பயன்படுத்தி விண்ணரசிலும் இடம் தேடிக் கொள்ளவும் அழைக்கப்படுகின்றோம், எனவே நிலையற்ற உலகச் செல்வங்களை நிலைவாழ்வைப் பெறுவதற்குப் பயன் படுத்துவோம். ஏனெனில், ‘பொருள் ஆசையே எல்லாத் தீமைகட்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் நம்பிக்கையிலிருந்து பிறழ்ந்து திரிந்து பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள்மேல் வருவித்துக் கொள்கிறார்கள்’ (1 திமொ 6: 10). ஆகையால், அழிவுக்கு இட்டுச் செல்லும் பேராசையை நம்மிடமிருந்து அகற்றி இறைப்பற்றோடும் இறைமனித அன்போடும் வாழ்வோம். ஆகவே, “எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவர்க்கு வாழ்வு வந்துவிடாது” என்பதை நினைவில் கொள்வோம்.

*-சவரிநாதன், சுங்கைபட்டாணி*

**ஆண்டின் பொதுக்காலம் 18-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | ச.உ. 1: 2, 2: 21-23 |
| தி. பாடல்: | 90: 3-4. 5-6. 12-13. 14,17 |
| 2ம் வாசகம்: | கொலோ3: 1-5,9-11 |
| நற்செய்தி: | லூக் 12: 13-21 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை- வாரம் 2